# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**Pr.O.P.No. 148/2018**

சாட்சி : PW-3

பெயர் : திரு. சந்திரசேகரன் தேதி : 20.10.2023

**குறுக்குவிசாரணை** :- ( 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில்)

நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வரவில்லை. மனுதாரர் கேட்டுக்கொண்டதன்பேரில் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் பத்திரம் எழுதும் தொழில் செய்து வருகிறேன். எனக்கு தனியாக அலுவலகம் எதுவும் கிடையாது. உயில் எழுதுவதற்கு என்னை அழைத்த ரங்கநாதனுடன் எனக்கு சுமார் 5 வருடங்களாக பழக்கம். ரங்கநாதனுக்கு வேலாயுதம் என்ற மகன் உள்ளார். இதற்கு முன்பு ரங்கநாதனுக்கு வேறு பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளேனா என்று ஞாபகமில்லை. ம.சா.ஆ.-1 உயில் எழுதுவதற்கு நான் ரங்கநாதன் வீட்டிற்கு சென்றிருந்தேன். அப்பொழுது வீட்டில் ரங்கநாதன் மற்றும் அவர் மகன் வேலாயுதம் இருந்தனர்.

உயில் எழுதுவதற்குரிய விவரங்களை என்னிடம் ரங்கநாதன் சொன்னார். ரங்கநாதன் உயில் எழுதுவதற்கு 2 நாட்களுக்கு முன்பு என்னை அழைத்ததன்பேரில் அவர் வீட்டிற்கு சென்றிருந்தேன். உயில் எழுதுவதற்கான Draft-ஐ என் வீட்டில் தயாரித்தேன். மறுநாள் ரங்கநாதனிடம் Draft உயிலை காட்டினேன். அவர் சரி என்று சொன்னபின்பு மறுநாள் உயிலை தயாரித்தேன். ரங்கநாதனிடம் ம.சா.ஆ.-1 உயிலில் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து கையொப்பம் பெற்றேன். அவ்வாறு நான் கையொப்பம் பெற்றபொழுது காலை சுமார் 11 மணி இருக்கும். உடனடியாக சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். சார்பதிவாளர் அலுவலகத்தில் ரங்கநாதனின் மகன் வேலாயுதம் இருந்தார்.

ம.சா.ஆ.-1 உயிலில் ஷாநவாஸ் மற்றும் பாலசுப்ரமணியம் ஆகியோர் சாட்சி கையொப்பமிட்டனர். சாட்சிகள் ரங்கநாதனுடன் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்தனர். ம.சா.ஆ.-1 உயிலில் நான் உயிலை தயாரித்தவன் என்ற முறையில்

கையொப்பமிட்டுள்ளேன். சாட்சியாக கையொப்பமிடவில்லை. நான் முதல்விசாரணையில், ம.சா.ஆ.–1 உயிலில் சாட்சியாகவும், கையொப்பமிட்டுள்ளதாக சொல்லியிருந்தால் அது தவறு. நான் 13.07.2022 ம் தேதி முதல் 06.01.2023 ம் தேதி வரை நான் அமெரிக்காவில் என்மகள் வீட்டில் இருந்தேன். நான் அமெரிக்கா செல்வதற்கு முன்பு என்னை இந்த மனுவில் சாட்சியம் அளிக்க மனுதாரர் அழைக்கவில்லை.

மனுதாரரின் அப்பா வேலாயுதம் சொன்ன தகவல்களின் அடிப்படையில் ம.சா.ஆ.–1 உயிலை தயாரித்து பதிவுசெய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. ரங்கநாதன் கொடுத்த தகவலின்பேரில் நான் ம.சா.ஆ.–1 உயில் தயாரித்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரரின் தகப்பனார் வேலாயுதத்திற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd./-S. Jeganathan,
I Additional District Judge,
Salem.